பகலவன் பெருமை

முன்னுரை - இராமாயணம் யுத்த காண்டம்

யுத்தம் செய்ய இராமனும் களைப்புற்றிட
வித்தையின் முடிவிலே வெற்றிகள் பெற்றிட
உத்தமர் அகத்தியர் உரைத்த மந்திரமே
சுத்தமாய் குளித்து சொல்வோம் தினமே

செய்யும் தொழிலை செவ்வனே செய்திட
மெய்யான பலத்தை மெத்தன பெற்றிட
தெய்வங்கள் கூடவே தேவராய் வசிப்பவரை
மய்யமாய் பகலவனை மனதிலே துதியென்றாரே

பகலவனைத்  துதித்தால் பகைவரும் மடிவார்
அகத்தில் மகிழ்வை அனுதினம் அடையலாம்
எப்போதும் மங்களம் எல்லா பாவமுமழியும்
தப்பாது கவலைகள் தானாக ஒடுங்கும்

உலகத்தில் யாவரும் உளமாரத் துதிக்கும்
சுலபமாய் அசுரரும் சுகமாய் துதிக்கும்
திகழும் தேவரும் துதிக்கும் தேவனை
பகலவனைத் துதிப்பாய்  பாரின்தலைவனைத் துதிப்பாய்

திசையெங்கும் ஒளிரும் தேவாதி  தேவன்
அசையும் பொருள்யாவும் அவனையே துதிக்கும்
விசையாய் பிரம்மனாய் விஷ்ணுவாய் சிவனாய்
தசையுள்ள மனிதனாய் தனயன் கந்தனாய்

இந்திரியமாய் செல்வமாய் இயக்கம் காலமாய்
சுந்தர நிலவாய் சுமைகுறை எமனாய்
பொழியும் மழையாய் பெற்றவர் முன்னோராய்
அழியா வசுவாய் அண்டம் காப்பவனவனே

மருத்துவக்  கடவுளாய் மகத்தான காற்றாய்
உருவில்லா தென்றலாய் உக்கிர நெருப்பாய்
உள்வாங்கும் மூச்சாய் உயிரான ஒளியாய்

கள்ளமில்லா ஆறறிவாய் கடவுளாய் ஆனவனே

பகலவன் பெருமை பன்னிரண்டு  துதி

அதிதியின் மகனே அழகான அரசனே
அதிசயச்  சுடரே அண்டத்தின் அசைவே
காவலனே தங்கமே  கண்பறிக்கும் ஒளியே
யாவையும் இயக்கும் இயந்திர வெளிச்சமே

பச்சை குதிரைகளுடன்  பாயும் சுடரே
உச்சத்தில் எழுகுதிரை உடலொளி கதிரே
துச்சமாய் இருளகற்றி திருப்திதரும் எழுச்சியே
மிச்சமின்றி பரவியெங்கும் மீண்டும்மீண்டும் வருபவனே

மழையினால் குளிரும்  மகத்தான வெப்பமும்
அழைக்காது ஒளியும் ஆனந்த துதியுமானவனே
தன்னுள் நெருப்பைத் தக்க வைத்து
மின்னும் பனிவிரட்டி மேவிடும் மகனே

அண்டத்தை ஆட்டிவைத்து அகிலத்தில் பரவி
உண்டாகும் ஒளியால் உடனே இருள்விலக்கி
தண்ணென மழையும் தரணியில் இறங்க
விண்ணில் தெற்கே விந்தியமலை நகர்பவனே

உருவாக்கும் கடவுளே உணர்வாக்கும் வெப்பமே
கருவிலே பகையழித்து கார்கால மழைதந்து
உருண்ட மஞ்சளே உலகத்து அறிவே
சுறுசுறுப்பு ஒளியே சுந்தர வெளியே

பன்னிரண்டு மாதமாய் பரவிடும் தேவனே
மின்னிடும் விண்மீன்களின்  மிளிரும்  தலைவனே
கிழக்கில் உதித்து மேற்கில் மறைந்து

வழக்கம் தவறாதவனே வந்தனம் உனக்கு

வெற்றிகள் வந்திட வேண்டியது அருள்பவனே
குற்றமில்லா வளமையே குறைவில்லா செல்வமே
கணக்கில்லா கதிர்களே கருமை விலக்கியே
குணமான அதிதியின் குமாரனே வந்தனம்

எதிரிக்கு அச்சமே எழுந்திடும் வீரமே
உதிக்கும் விதியே உனக்கு வந்தனமே
கமலம் மலர்ந்திட கடிவேகக் கதிரோனே
அமரனாய் மீண்டும் அகிலத்தைப் படைப்பவனே

முத்தேவரின் உற்சாகமே முன்னின்று காப்பவனே
சித்தத்தை சீராக்கி சினத்தால் சிறுமைபோக்கி
மொத்தத்தில் வலிமையாகி முழுமுதல் பொருளாகி
சத்தான ஒளியே சாத்திர உண்மையே வந்தனம்

தங்க ஒளியே தாரணி வெளிச்சமே
மங்காத மகிமையே மாறாத உண்மையே
இயக்கும் இயந்திரமே இருளை விலக்குமே
மயக்கும் அழகே மருவில்லா சாட்சியே

கதிரால் நம்மை காத்து நிற்பவனே
உதித்து தினமும் உணர வைப்பவனே
அதிசயமாய் உருவாக்கி அருள்மழை பொழிபவனே
துதித்து நிற்பேன் தூயவனே உன்னையே

எப்போதும் விழிப்பவனே எங்கும் வியாபித்தவனே
தப்பாது உதிப்பவனே தவறுகள் தடுப்பவனே
செய்யும் யாகத்தின் செழிப்பான பலனே
மெய்யான தெய்வமே மேவிடும் தங்கமே

துதிப்பதின் பலன் (பலஸ்ருதி)

இனிய இராகவனே இப்பாடலைப் பாடுவோர்
இனிமைகள் பெறுவாரே இன்னல்கள் களையுமே
உடலும் உள்ளமும் உண்மை அறிவும்

இடர்கள் நீங்க இனிதாய் இருக்குமே

மனதால் அதிதியை மன்றாடி வேண்டுவாய்
தனமாய் வெற்றியை தாராளமாய் பெறுவாய்
மூன்றுமுறை சொல்லிடு முறையாய் பயின்றிடு
சான்றாய் வென்றிடு இராவணனைக் கொன்றிடு

அகத்திலே தியானித்து அகத்தியர் பெற்றறிவை
மகத்துவம் பொருந்திய மந்திர உபதேசத்தை
சுகமாய் இராமனுக்கு சொல்லித் தந்திட
பகலவன் பெருமை பாருக்கு கிடைக்குமே

கவலைகள் களைந்து காவியத் தலைவனும்
சுலபமாய் வென்றிட சோர்வுகள் இழந்து
முறுவலுடன்  இராமன் மும்முறை ஓதிட
கருத்தும் தெளிவாகி கரத்தில் வில்லேந்தினான்

கொடிய இராவணனைக் கொன்றிட வலிமையை
நொடியில் அளிக்க நேரிலே பகலவன்
அருளிய உண்மையே அன்றைய கதையே
அருளிய வால்மீகியே அடியேனின் வந்தனம்

மூலம் - வால்மீகி
தமிழாக்கம் - வரத்திருமகள்

உபயம் - http://aumamen.com/stotra/aditya-hridayam-stotram